අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## வரலாறு

## வினாத்தாள் I & II



முழுப் பதிப்புரிமையுடையது |All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

கல்வி அமைச்சு

| 33 | T | I |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**வரலாறு - I** | நேரம் : 1 மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள்**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. "அன்றைய இலங்கை" எனும் ஆங்கில இலக்கியத்துக்குரிய நூலாசிரியர்
   (1) ரிபைரோ (2) பிலிப்ஸ் பல்டியஸ் (3) ரொபேட் நொக்ஸ் (4) இபின்பதூதா
2. இலங்கையின் புராதனனகால நாணயங்களில் பொலன்னறுவைக் காலத்துக்குரியது
   (1) கஹபண (2) புராண (3) தரண (4) தம்பமஸ்ஸ
3. வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவங்களில் ஒன்று
   (1) உலகம் பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்தாமை
   (2) நாட்டின் தேசிய தனித்துவத்தை அறிந்துகொள்ளல்
   (3) தேசிய ஒற்றுமையை சீர்குலைத்தல்
   (4) இறந்தகால அனுபவம் இன்றி எதிர்காலத்தை சிறப்பாக்குதல்
4. வரலாற்றுக்கு முற்பட்ட புவியியற் காலப்பகுதியில் அதிக மழைவீழ்ச்சி நிலவிய யுகம்
   (1) பிளைத்தோசின் யுகம் (2) மயோசின் யுகம்
   (3) ஹொலோசின் யுகம் (4) யுறாசிக் யுகம்
5. ஆரம்ப வரலாற்றுக்காலத்தில் குடியிருப்புக்கள் பரவலடைந்து காணப்பட்ட வலயங்களிலொன்று
   (1) ஈரவலயம் (2) உலர்வலயம் (3) வறள்வலயம் (4) அரைவறள் வலயம்
6. புராதன இலங்கையில் உலர்வலய மக்கள் குளத்தொகுதியை குறிக்க பயன்படுத்திய சொல்
   (1) எல்லங்காவ (2) வெப்வ்பிரதானய (3) தொட்டபோஜக (4) போஜக்கபதி
7. பாதிகாபய மன்னன் காலத்தில் எவ்விகாரையை அலங்கரிப்பதற்காக உரோமாபுரிக்கு தூதுவர்களை அனுப்பி கண்ணாடி மணிகள் பெறப்பட்டது.
   (1) ரூவான்வெலிகாய (2) மிருகவெட்டிய
   (3) ரன்கொத் விகாரை (4) அபயகிரி விகாரை
8. கல்வெட்டுக்களில் தன்னை அலகபய மகாராஜா எனக்குறிப்பிட்டுள்ள அரசன்
   (1) குட்டகண்ண அபயன் (2) மகாசேனன்
   (3) 1ம் காசியப்பன் (4) தாதுசேனன்
9. 1ம் உபதிஸ்ஸ மன்னனால் கர்ப்பிணித் தாய்மாரின் தேவைக்காக கட்டப்பட்ட விடுதி
   (1) சொத்திசால (2) உபசக்கரோசநாச
   (3) பசவந்திநாமசால (4) வெஜ்ஜசால
10. புராதனகால சேனைப்பயிர்ச் செய்கை கல்வெட்டுக்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது
   (1) செஹென் (2) சேன (3) பெல (4) பிடபிம்

11. பின்வரும் நிரல் I தரப்பட்டுள்ள தொழில்களையும் நிரல் II இல் தரப்பட்டுள்ள தொழில்புரிவோரையும் ஒழுங்குபடுத்தும் போது பெறப்படும் சரியான விடையாது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. இரத்தினக்கல் பட்டை தீட்டுவோர் | A – ததவய |
| 2. தந்தச் செதுக்கல் | B – கும்பகார |
| 3. வனைதல் தொழில் | C – தடிகசுமண |
| 4. நூல் நூற்பவர் | D - மணிகர |

*(1)* A B C D *(2)* D C B A *(3)* B C D A *(4)* D C A B

12. புராதன இலங்கையில் அமுக்கப்பிரயோகம் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பமாக அமைவது
(1) களிமண் ஓட வடிவிலான கல்லறை மயானம் தயாரிக்கும் போது
(2) உடரஞ்சாமடம வீடுகட்டும் தொழினுட்பத்தின் போது
(3) மட்பாண்டங்களை சூளையில் வைத்து சுடும் போது
(4) கற்பாறைகளை பிரித்தெடுக்கும் போது

13. புராதன காலத்தில் கால அளவீடு பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பமாக அமைவது
(1) விவசாயத் தேவைக்காக (2) இயற்கை அனர்த்தங்களை அறிவதற்காக
(3) கால நிலைமாற்றத்தை அறிவதற்காக (4) தூரத்தை அறிவதற்காக

14. கி.பி 3ம் நூற்றாண்டுகளில் சாந்தி பூசை செய்யப்பட்டதன் நோக்கங்களில் ஒன்று
(1) மக்களின் பாதுகாப்புக்காக (2) கிராமத்தின் பாதுகாப்புக்காக
(3) பசுக்களின் பாதுகாப்புக்காக (4) விளை நிலங்களின் பாதுகாப்புக்காக

15. பின்வருவனவற்றுள் “போஜக்கபதி” வரி அறவிடப்படுவது
(1) குளத்துநீரை பயன்படுத்துவோரிடமிருந்து
(2) அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர்செய்வதற்காக
(3) வாய்க்கால்களில் மீன் பிடித்தலுக்காக
(4)வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக

16. மிருகங்களை கொல்வோருக்கு மரணதண்டனை விதிக்கும் சட்டம் 4ம் மகிந்த மன்னனால் எக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது
(1) வேவல்கெட்டிய கல்வெட்டு (2) மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு
(3) வட்டவான தூண் கல்வெட்டு (4) சொரபொர தூண் கல்வெட்டு

17. முதலாம் விஜயபாகு மன்னன் தனது நிர்வாக தலைநகரமாக பொலநறுவையைத் தெரிவு செய்தமைக்கான காரணம் அல்லாதது
(1) கி.பி 9ம் நூற்றாண்டின் பின் இந்து சமுத்திரத்தின் வர்த்தகம் சமுத்திரத்தின் கிழக்குப் பகுதியை மையமாக கொண்டு செயற்பட்டமை
(2) கிழக்குத் துறைமுகத்தினூடாக நாட்டுக்கு கிடைக்கும் வருமானத்தை நிர்வகிப்பதற்கு
(3) நாட்டுக்குள் பிரவேசிக்கும் பல்வேறு நபர்களினால் பாதுகாப்பு தொடர்பாக ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தடுத்துக் கொள்வதற்காக
(4) கலிங்க, பாண்டிய வம்சங்களிடையே ஏற்பட்ட ஆட்சியதிகாரப் போராட்டம்

18. இரண்டாவது நகரமயமாக்க காலத்தில் நகரங்களின் அளவு அனுராதபுரம், பொலனறுவை அளவு பெரிதாகக் காணப்படாமைக்கான காரணமாக துறைசார் அறிஞர்களால் சுட்டிக்காட்டப்படுவது
(1) மக்கள் வேறு இடங்கள் நோக்கிப் புலம்பெயர்ந்தமை
(2) மத்திய அரச நிர்வாகம் சீர்குலைந்தமை
(3) வர்த்தகமும் போக்குவரத்தும் தடைப்பட்டமை
(4) இலங்கை அரசியலில் காணப்பட்ட அதிகாரப் பரவலாக்கம்

19. முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் கண்டி இராச்சியத்தில் புதியதோர் அரசவம்சத்தை ஆரம்பித்து வைத்த போது எதிர்கொண்ட சவாலாக அமைவது
(1) கண்டி இராட்சியத்தையும் ஒல்லாந்தரின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டி இருந்தமை
(2) விமலதர்மசூரிய என்ற பௌத்த நாமத்தை சூட்டிக்கொண்டமை
(3) வீழ்ச்சியுற்றிருந்த பௌத்த சமயத்தை மீளவும் எழுச்சியுறச் செய்ய வேண்டியிருந்தமை
(4) சீதாவாக்கையின் தெலகமு விகாரையில் இருந்த புனித தந்தத்தை கண்டியில் பிரதிஷ்டை செய்தமை

20. பின்வரும் நிரல் I இல் மன்னர்களும் நிரல் II இல் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட தலைநகரங்களும் காட்டப்பட்டுள்ளது.
நிரல் I இற்கு அமைவாக நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும் போது பெறப்படும் சரியான விடை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1- மூன்றாம் விஜயபாகு<br>2- முதலாம் புவனேகபாகு<br>3- இரண்டாம் புவனேகபாகு<br>4- நான்காம் புவனேகபாகு | A- கம்பளை<br>B- குருணாகல்<br>C- யாப்பகூவ<br>D- தம்பதெனியா |

(1) D C B A (2) A B C D (3) D B C A (4) D A C B

21. கண்டி இராட்சியத்தில் அதிகளவு நிலம் பயன்படுத்தப்பட்டது
(1) நெற் பயிர்ச்செய்கை (2) தேயிலைப் பயிர்ச்செய்கை
(3) சேனைப் பயிர்ச்செய்கை (4) இறப்பர் பயிர்ச்செய்கை

22. நிரல் I போர்த்துக்கேயருக்கு எதிரான போர்களும் நிரல் II தலைமை தாங்கிய படைவீரர்களும் தரப்பட்டுள்ளது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1- தந்துரேபோர்<br>2- பலன போர்<br>3- ரன்தெனிய வெலபோர்<br>4- கண்ணொறுவ போர் | A- தியோ கோ த மெல்லோ<br>B- கொன்ஸ்ல் தாங்கினு த சா<br>C- தொன் ரெரோனி மோ த அசவேது<br>D- பெரோ லோபேஸ்த சூ சா |

நிரல் I ஐ நிரல் II ஐ தொடர்புபடுத்துவதனால் அமையும் விடையாக அமைவது
(1) D B C A (2) D C B A (3) C A B D (4) D A C B

23. மறுமலர்ச்சியால் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களில் ஒன்று
(1) இலங்கையில் உரோம டச்சு சட்டம் அறிமுகமாகியது
(2) வர்த்தகப்பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை
(3) பணப்புழக்கம் அறிமுகப்படுத்தப்பட்டமை
(4) அச்சியந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டமை

24. பின்வரும் ஆளுநர்களுள் வீதி அமைப்புடன் தொடர்புடையவர்கள்
A- பிரட்றிக்நோர்த் B- தோமஸ்மெயிலன்ட் C- எட்வேட்பான்ஸ்
D- ஹென்றிவாட் E- றொபட் பிறவுன்றிக் F- மெக்கலம்
(1) A யும் C யம் (2) Bயும் C யும் (3) Dயும் Eயும் (4) Cயும் Dயும்

25. இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர்
(1) ரொபட் பிறவுன்றிக் (2) எட்வேட் பான்ஸ்
(3) பிரட்றிக் நோர்த் (4) ஹென்றிவோட்

26. பின்வருவனவற்றுள் கோல்புறுக் சீர்திருத்தம் அல்லாதது
(1) அரசின் நிலக்கொள்கை (2) கிராம சபைகளின் எழுச்சி
(3) புதிய நீதிமன்றமுறை (4) அரசின் புதிய வரிக்கொள்கை

27. 1848 ஆம் ஆண்டு போராட்டத்தினை முன்னெடுத்துச் சென்ற தலைவர்களை மாத்திரம் கொண்ட விடைத்தொகுதி
(1) கொங்காலேகொட பண்டா, வீரபுரன் அப்பு, டிங்கிரால
(2) கொங்காலேகொட பண்டா, எகலப்பொல, தீனிஸ்
(3) வீரபுரன் அப்பு, கெப்படிபொல, தீனிஸ்
(4) எகலப்பொல, கெப்பட்டி பொல, மடுகல்ல

28. 1818 முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த காரணங்களுள் ஒன்று
(1) கிராமசபைகள் செயலற்றுப்போனமை
(2) இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை
(3) அரசின் வர்த்தக ஏகபோக உரிமை அகற்றப்பட்டமை
(4) மலைநாட்டுப் பிரதானிகளுக்கேற்பட்ட தாக்கம்

29. பெப்டிஸ்ட் மிஷனரியின் வெளியீடாக அமைவது
(1) மாசிக்கதேக்க (2) லக்மினி பஹன (3) லங்காநிதானனய (4) உரகல

- பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 30,31 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

  A - இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீக்குதல்

  B - பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமுறை அறிமுகமானமை

  C-அரசின் வர்த்தக ஏகபோக முறைமை அகற்றப்பட்டது

  D-சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்களை அதிகரித்தல்

  E-கட்டகாய இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை

30. மேற்படி சீர்திருத்தங்களுள் கோல்புறூக் சீர்திருத்தத்தின் முக்கியமான அம்சங்கள்
    (1) C யும் E யும் (2) A யும் D யும் (3) B யும் E யும் (4) D யும் E யும்
31. 1910 ஆம் ஆண்டு சீர்திருத்தத்துடன் தொடர்புடைய கோரிக்கைகளாக அமைவன
    (1) A யும் E யும் (2) A யும் D யும் (3) B யும் D யும் (4) C யும் E யும்

- கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்ட்டுள்ள சோடிக்கூற்றுக்களை / சோடிச் சொற்களை அவதானித்து வினா 32 தொடக்கம் 34 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.

| | |
|---|---|
| A I. சர்வதேச சங்கம் | B I. பிரான்சிஸ் பேடினன்ட் கொலை |
| II. இரண்டாம் உலகமகாயுத்தம் | II. முதலாம் உலகமகா யுத்தம் |
| C I. அடோல்ப் ஹிட்லர் | D I. ஐக்கிய நாடுகள் சபை |
| II. கருஞ்சட்டை இராணுவம் | II. சான்பிரான்சிஸ்கோ மாநாடு |

32. முதலாவதன் எழுச்சிக்கு இரண்டாவது காரணமாகும் சோடியாக அமைவது
    (1) A 2) B (3) C (4) D
33. முதலாவது சம்பவம் இரண்டாவது சம்பவத்திற்கு காரணமாக அமையும் சோடி
    (1) A (2) B (3) C (4) D
34. முதலாவதன் வீழ்ச்சி இரண்டாவதன் தோற்றத்திற்கு காரணமாக அமையும் சோடி
    (1) A (2) B (3) C (4) D
35. உலக சமாதான தினம்
    (1) ஏப்ரல் 22 (2) யூலை 11 (3) நவம்பர் 11 (4) டிசம்பர் 10
36. இலங்கை நாட்டின் சிறப்பாக செயற்பட்ட தொழிலாளர் தலைவராக செயற்பட்டவர்
    (1) கோ. நடேசுஐயா (2) ஜேம்ஸ் பீரிஸ்
    (3) டீ.பீ.ஜயதிலக (4) ஏ.ஈ.குணசிங்க
37. மகாவலி அபிவிருத்தி அமைச்சு ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
    (1) 1978 (2) 1982 (3) 1988 (4) 1990
38. குண்டசாலை, தெல்பிட்டி, நாரம்மலை போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ள ஆய்வகப்பயிர்
    (1) சிறு ஏற்றுமதிப்பயிர் (2) மரக்கறிப்பயிர்
    (3) பெருந்தோட்டப்பயிர் (4) கிழங்குவகை

- கீழே A,B என்பவற்றில் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

  A- 1763 ஆம் ஆண்டின் பின்னர் அமுல் செய்யப்பட்ட புதிய வரிகள்

  B- போல்ஷெவிக்குகளின் அரசை தோற்றுவித்தமை

39. அமெரிக்காவின் சுதந்திரப் போராட்டம் தொடர்பானது
    (1) Aயும் Bயம் சரியானவை (2) A சரியானது B பிழையானது
    (3) Aயும் Bயும் பிழையானவை (4) A பிழையானது B சரியானது
40. ரஸ்யப் புரட்சியுடன் தொடர்புடையது
    (1) Aயும் Bயும் சரியானவை (2) Aயும் Bயும் பிழையானவை
    (3) A பிழையானது B சரியானது (4) A சரியானது B பிழையானது

***

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

# கல்வி அமைச்சு

| 33 | T | II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**வரலாறு - II** | **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்**

* பகுதி I இல் வினா இலக்கம் 1 கட்டாயமானது.
* பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.
* எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1.(அ) கீழே (i) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் எல்லாவற்றையும் வழங்கப்பட்டுள்ள இலங்கை புறவுருவப்படத்திலும் (ii) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் பகுதி உலகப் புறவுருவப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) ஜோதவாவி, களுகங்கை, மாதுறுஓயா நீர்த்தேக்கம், குருளுவாவி, அம்பன் கங்கை, பலன, வல்லிபுரம், புந்தல, பாகியன்கல, லங்காபட்டுன, சேனநாயக்க, சமுத்திரம், சீகிரியா (12 புள்ளிகள்)

(ii) கொரிய குடாநாடு, அரபிக்கடல், பீஜிங், கிரேக்கம், சுயஸ் கால்வாய், மும்பாய் (06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A- ரூசோவின் மக்களின் சுதந்திரம் தொடர்பான நூல்

B- இலங்கையில் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்திற்கு பக்க துணையாக செயற்பட்ட எகிப்து நாட்டவர்

C- கி.பி 1954 ஆம் ஆண்டில் தந்துரே போரில் போர்த்துக்கேயரைப் படுதோல்வி அடையச் செய்த மன்னன்

D- கி.பி 5ஆம் நூற்றாண்டில் கட்டி எழுப்பப்பட்ட சிறந்த நகர நிர்மாணமாக கொள்ளப்படுவது

(4 புள்ளிகள்)

- A,B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து வினவப்பட்ட வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.



A

(ii) 1. ‘A’ எழுத்தினால் காட்டப்பட்டுள்ள உருவின் பெயர் என்ன?
2. மேற்படி உருவுடன் தொடர்புடைய தொழினுட்பத்தினை பெயரிடுக.
3. இது எவ் மாகாணத்தில் காணப்படுகின்றது.
4. இத் தொழினுட்பத்தில் பயன்படுத்தப்பட்ட (இரசாயன) கற்களில் ஒன்றினை பெயரிடுக. (4 புள்ளிகள்)



B

(iii) 1. ‘B’ இனால் காட்டப்பட்டுள்ள படத்தில் காணப்படுபவரின் பெயரினை குறிப்பிடுக.
2. இவரால் உருவாக்கப்பட்ட யாப்பினை பெயரிடுக.
3. இவரது யாப்பில் அறிமுகமான தேர்தல் முறை எது?
4. எந் நதியின் அபிவிருத்தி திட்டங்களை இவர் முன்னெடுத்தார். (4 புள்ளிகள்)

## பகுதி II

2. (i) இலங்கையில் கற்கால மனிதர்கள் வாழ்ந்த தாழ்நில ஈரவலய குகைகள் மூன்றினை பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) கற்கால மனிதர்கள் உட்கொண்ட விலங்கு உணவுகள் இரண்டினையும் தாவர உணவுகள் இரண்டினையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) கற்காலத்தில் நிலவிய சடங்கு சம்பிரதாய முறைகளை இரண்டு அகழ்வாராய்ச்சி ஆதாரங்களை கொண்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) முன்வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மனிதன் தொழில்நுட்பத்தை பயன்படுத்திய விதத்தினை மூன்று காரணிகளை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (6 புள்ளிகள்)

3. (i) மகாவம்சம் குறிப்பிடும் குளக்குடியேற்றக் கிராமங்கள் (வாவிகாம) மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) A. காரணகாரிய அடிப்படையில் செயற்பட்ட கிராம வகைகளில்
  (i) துறைமுகத்தை அண்டிய கிராமம்
  (ii) மக்களால் கைவிடப்பட்ட குளக்கிராமங்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டன. (3 புள்ளிகள்)

B. 1. குடும்பத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் குடும்பத்தலைவர்கள் கி.மு 250 ஆம் ஆண்டை அண்மிய கல்வெட்டுக்களில் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர்.
  2. கிராமத்தில் குடும்பத்தலைவர்கள் கொண்ட குழுவின் தலைவன் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டான். (4 புள்ளிகள்)

(iii) துட்டகைமுனு மன்னன் நாட்டில் பரவலாக இருந்து வந்த அதிகாரத்தை மையப்படுத்திய செயற்பாட்டை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களுள் முதலாம் விஜயபாகு மன்னன் சிறப்பான ஒருவன் என்பதனை மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (6 புள்ளிகள்)

4. (i) இலங்கையின் பண்டைய கால நிர்வாக அமைப்பில் அரசுடன் தொடர்பானவை பின்னவருவன அழைக்கப்பட்டன. (3 புள்ளிகள்)

1. சட்ட, நிர்வாகத்துறை -
2. அரசனின் ஆணை -
3. நீதித்துறை -

(ii) கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய மன்னர்களை ஒழுங்கு முறைப்படி குறிப்பிடுக.

A- கர்ப்பிணித் தாய்மாரின் தேவைக்காகப் பிரசவ விடுதிகளைக் கட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னன்
B- ருவன்வெலிசாய தாது கோபத்திற்கு பூஜை செய்வதற்குத் தேவையான கண்ணாடி மணிகளை பெற்று வருவதற்காக உரோம நாட்டிற்கு தூதரக அதிகாரிகளை அனுப்பிய மன்னன்.
C- கி.பி 8 ஆம் நூற்றாண்டுகளில் சீனாவுடன் பலமான தொடர்புகளை பேணிய மன்னன்
D- கெதிஅட, கெடுகனக ஆகிய கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்ட சேனைப்பயிர்ச்செய்கை வரிகளை நீக்கிய மன்னன்

(iii) இலங்கையின் புராதன குடியிருப்புக்கள் உலர்வலயத்தில் பரம்பியிருந்த காரணத்தினால் நீரை சேமித்து வைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நீர்முகாமைத்துவ நடவடிக்கைகள் இரண்டினை குறிப்பிட்டு நுணுகி ஆராய்க. (5 புள்ளிகள்)

(iv) வைத்தியக்கலை தொடர்பான மிக நீண்ட வரலாறு புராதன இலங்கையில் காணப்பட்டது. இவ்வகையில் சுகாதார சேவையும் வைத்தியமுறையும் வளர்ச்சி அடைந்திருந்த விதத்தினை மூன்று காரணிகளை குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

5. (i) கண்டி இராட்சியத்தை ஆட்சி செய்த நாயக்க வம்ச மன்னர்கள் மூவரின் பெயர்களை குறிப்பிடுக.

(ii) கீழே A,B,C,D எனத் தரப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A- கண்டி இராட்சியத்தினுள் நுழையும் பாதை

B- குசுமாசன தேவியின் கத்தோலிக்க பெயர்

C- தந்துரே போர் நடைபெற்ற ஆண்டு

D- ‘இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல’ கூற்றுடன் தொடர்புடைய மன்னன்

(பலன, 1594, 1602, தோனாகபிரினா, 1ம் இராஜசிங்கள், 2ம் இராஜசிங்கன், முல்லேரியா, தொன்யுவான்)

(iii) கண்டி இராச்சியத்தில் காணப்பட்ட நீதிச் செயற்பாடுகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பினை மூன்று காரணிகள் கொண்டு விளக்குக.

6. (i) கண்டி மன்னனைச் சந்திப்பதற்கு வந்த ஆங்கிலேயத் தூதுவர்கள் யாவர்? (3 புள்ளிகள்)

(ii) 1797 கிளர்ச்சிக்கான காரணங்களை அறிய நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகள் 2 தருக.

(4 புள்ளிகள்)

(iii) 1815 ம் ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றுவதற்கு சாதகமாய் அமைந்த காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(iv) 1848 ம் ஆண்டு ஆங்கில எதிர்புக் கிளர்ச்சிக்கு கோல்புறுக் கமரன் சீர்திருத்தங்கள் எவ்வாறு காரணமாகியது என்பதனை மூன்று உதாரணங்களுடன் விளக்குக.

7. (i) இலங்கையில் பிரித்தானியரால் அறிமுகம் செய்யப்பட்ட பயிர்கள் 3 தருக.

(ii) கோல்புறுக் யாப்புச் சீர்திருத்தத்திற்கு ஏற்ப இலங்கையில் ஏற்பட்ட நான்கு மாற்றங்கள்.

(iii) பிரித்தானியரின் ஆட்சியில் தேயிலைப் பயிர்ச் செய்கை விருத்தியில் பங்களிப்புச் செய்த காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(iv) பிரித்தானியர் ஆட்சியின் காரணமாக ஏற்பட்ட விளைவுகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

## பகுதி III

8. (i) பிரித்தானியரால் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி பரவிய ஐரோப்பிய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

(ii) கைத்தொழில் புரட்சியின் சில ஆக்கங்கள் A,B,C,D எனத் தரப்பட்டுள்ளன. உற்பத்தி செய்தவர்களின் பெயர்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

A- ஆகாய விமானம்

B- புகையிரத எஞ்சின்

C- மோட்டார் வாகனம்

D- மியூல் பொறி

(கிரகம்பெல், ரைட்சகோதரர்கள், ஜோர்ச் ஸ்ரீவன்சன், ஜேம்ஸ்வாற், சாமுவெல், டெம்ளர்)

*(4 புள்ளிகள்)*

(iii) கைத்தொழில் புரட்சி காரணமாக உலக பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்ட ஒவ்வொரு மாற்றங்களை குறிப்பிட்டு விளக்குக. *(5 புள்ளிகள்)*

(iv) கைத்தொழில் புரட்சி இலங்கையில் செல்வாக்கு செலுத்திய விதத்தினை மூன்று காரணங்களினைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

9. (i) உலகில் ஏற்பட்ட முக்கிய புரட்சிகள் மூன்றினை எழுதுக. *(3 புள்ளிகள்)*

(ii) அமெரிக்காவில் குடியேற்றங்களையமைத்த ஐரோப்பிய நாடுகள் நான்கினை எழுதுக. *(4 புள்ளிகள்)*

(iii) அமெரிக்க சுதந்திரப் போருக்கான காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. *(5 புள்ளிகள்)*

(iv) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்புரை வரைக.

A- பொஸ்டன் தேநீர் விருந்து

B- பிலடெல்பியா மகாநாடு

C- அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் *(6 புள்ளிகள்)*

***




ஆபிரிக்கா
Africa
இந்திய பெருங்கடல்
Indian Ocean
ஐரோப்பா
Europe
N